**தலைப்பு - 149 கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சிற்கு வழங்னப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) அமைச்சு முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டிற்குரிய தொகைகளுடன் ஒப்பிட்டு சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளன.

(ஆ) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2 நிதி முகாமைத்துவம்**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 13 செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 552.70 மில்லியன் பெறுமதியான தொகை பயன்படுத்தப்படாமல் சேமிப்பாக காணப்பட்டன. | நிதி ஒழுங்கு விதியின் பிரிவின் 50 இன் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | போதுமான கையிப்க்களற்றமை, போக்குவரத்து கொடுப்பனவுகளை அறவிட்டுக் கொள்வதற்கு போதுமான உத்தியோகத்தர்களில்லாமை. வருடாந்த நடுப்பகுதியில் அமைச்சரவை கலைக்கப்பட்டதனால் புதுப்பித்தலுக்கான தேவைப்பாடுகள் அவசியமற்று போனதுடன் மற்றும் பிரதேச அலுவலகம் தொடர்பான கொள்னவுக்கான தேவைப்பாடுகள் காணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திய பின்னர் 28 செலவின விடயங்களுக்கு மேலதிகமாக ஒதுக்கீடுகள் | நிதி ஒழுங்கு விதியின் பிரிவின் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பகுதியளவிலான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், போக்குவரத்து பெறுவனவுகளை அறவிட்டுக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தன. அச்செலவின விடயத்தின் சேமிப்புக்களுக்கான வீச்சு 32 சதவீதம் தொடக்கம் 93 சதவீதம் வரை காணப்பட்டிருந்தன. | | உத்தியோகத்தர்கள் காணப்படாமை, வருட இறுதியில் பதில் அமைச்சர் காணப்படாமையினால் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | முன்னைய ஆண்டின் 09 செலவின விடயத்திற்கான பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதுமான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2018 ஆண்டிற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக மொத்த ஒதுக்கீட்டில் உரிய கவனம் செலுத்தப்படாமல் உப மதிப்பீட்டில் ரூபா 195.42 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததால் மொத்த ஒதுக்கீடுகளும் சேமிப்பாக காணப்பட்டிருந்தன. | மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் முக்கிய தேவைக்கேற்ப மொத்த பாதீட்டு மதிப்பீடுகளின் மூலமாக ஒதுக்கீட்டின் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வது தொடர்பான முழுமையாகன ஒதுக்கீடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுகளின் செலவின விடயத்தினை தீர்ப்பனவு செய்யப்படாமல் தொடர்ந்து சேமிப்பாகவே காணப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் பதவிநீக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 100,208 பெறுமதியான தொகை கடன் மீதிகள் 09 வருடங்களுக்கு மேலாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சனநாயக்க சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையில் அத்தியாயாம் XXIV இன் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் இணங்கப்படுதல் வேண்டும். | இத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்கள் இரண்டு தடவைகளாக நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காமையினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ருந்தன. |
| (உ) | அமைச்சின் நிதிக்கூற்றின் படி அலுவலக உபகரணத்தின் பெறுமதிக்கும் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டின் படியான பெறுமதிக்கும் இடையில் ரூபா 8,269,591 இனால் வேறுபாடுகள் காணப்படுகின்றன. | நிதிக்கூற்றுக்களின் படியான நிலையான சொத்துக்களின் பெறுமதிகளும் மற்றும் நிலையான சொத்துக்களின் பதிவேட்டு பெறுமதிகளும் உடன்பட வேண்டும். | நிதிக்கூற்றிலுள்ள நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் அலுவலக உபகரணத்தின் ரூபா 28,624,422 பெறுமதி காட்டப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 8,269,591 றெுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்ப்பட்டதுடன் 2018.01.01 இல் திரண்ட சொத்துக்களின் பெறுமதியாக |

ரூபா 20,354,851 காட்டப்பட்டுள்ளது.

## 2.2 பொறுப்புக்கள் கடன்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செலவின விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினை பயன்படுத்திய பின்னர் ரூபா 126,750 பெறுமதியான தொகை மீதியாக காட்டப்பட்டிருந்தன. நிதி ஒழுங்கு விதி 94(1)இற்கு எதிராக மேற்குறிபிட்ட மீதியுடன் ரூபா 175,250 இனால் அதிகரித்து ரூபா 302,000 பெறுமதி பொறுப்பாக காட்டப்ட்டிருந்தன. | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | எதிர்பாராமல் ஏற்பட்ட திருத்த வேலைகளினால் ஒதுக்கீடு செய்ப்பட்டதை விட மேலதிகமாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 2.3 வைப்புக்களின் மீதி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி 571(2) இன் பிரகாரம் இரண்டு (02) வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 19,309,393 பெறுமதியான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிச் செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயற்திட்டத்தின் கீழ் 03 கைத்தொழில் துறைகளின் 04 ஒப்பந்த வேலைச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா. 97.66 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆயினும் மீளாய்வாண்டில் இச்செயற்திட்டங்களை அமுல்படுத்தப்படாமையினால் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் பிரகாரம் சரியான முறையில் செலவினங்களை மதிப்பீட்டு மற்றும் ஒதுக்கீடப்பட்ட செலவினங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். | அமைச்சரவையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதில் எற்பட்ட காலதாமத்தினாலும் மற்றும் சாதாரண பெறுகை செய்முறை செயற்பாட்டினை மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்ட்டமையினால் பணிச் செயற்பாடுகளை சரியான நேரத்தில் நிறைவேற்றமுடியவில்லை. |

### 3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயற்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாத 02 கைத்தொழில் துறைகள் மற்றும் 02 வாணிபங்களுக்காக ரூபா 11.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. | செயற்திட்டமானது சரியான முறையில் திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்படல் வேண்டும். | உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது எதிர்பாராத சூழ்நிலைமைகள் காரணமாக அதிகளவிலான செலவினங்கள் ஏற்பட்டிருந்தன. |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 02 கைத்தொழில் துறைகளுக்கும் 02 வணிக நடவடிக்கைகளுக்கும் ரூபா 26.11 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டில் இச்செயற்பாடுகளுக்கு ரூபா 28.85 மில்லியன் பெறுமதியானது செலவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 02 செயற்பாடுகள் தொடர்பாக பௌதீக ரீதியான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டமானது ஒதுக்கீடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். | ஒவ்வொரு செயற்திட்ட ஒப்பந்ததிற்கும் மொத்த மதிப்பிடப்பட்ட செலவுகளுக்கான தொகைகள் செலுத்தப்படும் வரை ஒப்பந்தகாரரினால் செயற்திட்ட வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட வேறு ஒப்பந்தகாரர்கள் ஏனைய செயற்திட்ட ஒப்பந்தத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்ட வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் ரூபா 135.59 மில்லியன் பெறுமதியான 09 செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவை நிறைவேற்றப்படாமல் காணப்பட்டன. மேலும் செயற்திட்டங்களின் முன்னேற்ற செயற்பாடுகள் பௌதீக ரீதியாக மதிப்பிடப்பட்ட போது 0 சதவீதம் தொடக்கம் 03 சதவீதம் வரையாக காணப்பட்டிருந்தன. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | வியாபரச் செயற்பாடுகளுக்கான உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமையினால் குறித்த நிறுவனத்தினால் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிராமை மற்றும் பெறுகை செயற்பாட்டுடன் தொடர்புடைய நடவடிக்கையில் தாமதங்கள் ஏற்பட்டமையினால் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் ஏற்பட்டன. |
| (ஆ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட 04 செயற்திட்டங்களுக்கான ரூபா 29.66 தாமதமாக ஓதுக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் செயற்திட்டங்களின் முன்னேற்ற செயற்பாடுகளை பௌதீக ரீதியாக மதிப்பிடப்பட்ட போது 45 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையாக காணப்பட்டிருந்தன. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டல் நடவடிக்கைகளின் தாமதங்கள் மற்றும் பெறுகை செயற்பாடுகளின் கால தாமதங்கள் காரணமாக பெறுகை குறிப்புக்களுக்கு ஒப்பந்தக்காரர்களினால பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 மிகை ஒதுக்கீட்டு செலவினங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 05 கைத்தொழிலதுறையில் 07 வாணிபங்களின் செயற்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 21,820,000 பெறுமதியை விட மேலதிகமாக செலவு செய்யப்பட்டிருந்தன. | ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்ட செலவின பெறுமதிற்குள்ளே செலவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பாராமல் ஏற்பட்ட செலவினத்தினால் மேலதிக செலவினங்கள் ஏற்பட்டடுள்ளன. |

## 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும் அவை நாளாதுவரை வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய கவனம் செலுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு விட்டன தமிழ் மொழிபெயர்ப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அம் மொழிபெயர்ப்புக்கள் முடிவடைந்தவுடன் கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்படும். |